

முன்னாள் சென்னை மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் அய்யாவு (வயது 67) என்கிற ராமச்சந்திரன் உடல் நலக் குறைவால் இயற்கையெய்தியதை அறிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி. அவர்கள் மாலை வைத்து இறுதி மரியாதை செலுத்தினார். உடன் தலைமை நிலையச் செயலாளர் பூச்சி எஸ். முருகன் மற்றும் மாநில வழக்கறிஞர் அணி துணை செயலாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### நாளை (ஜுலை 7) - திவான் பகதூர் - திராவிட மணி

# இரட்டை மலை சீனிவாசன் பிறந்த நாள் விழா!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர்கள் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை!

சென்னை, ஜுலை 6 -

தமிழ்நாடு அரசின் சார்பில், திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு, அவரது பெருமைகளைப் போற்றி அமைச்சர் பெருமக்கள், 7.7.2025 அன்று காலை 9.00 மணியளவில் சென்னை, கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்கள்.

திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கோழியாளம் என்னும் கிராமத்தில் இரட்டைமலை - ஆதியம்மாள் தம்பதியினருக்கு 7.7.1859 அன்று மகனாகப் பிறந்தார். இவர் பள்ளியில் படிக்கின்ற காலத்தில் சாதிக் கொடுமை இன்னல்களைக் கண்டார். சாதி வேறுபாட்டை அறவே ஒழித்திட வேண்டும் என்று உறுதியாக கொண்டார். அதற்காகத் தென்னிந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் செய்து ஆதிதிராவிடர் மக்களின் அன்றாட வாழ்க்கை நிலைமைகளை நேரில் கண்டறிந்தார்.

ஏழை, எளிய மக்கள் கல்வி கற்பதன் அவசியத்தையும், சுகாதாரத்துடன் வாழ வேண்டும் என்றும், சுத்தமான ஆடைகளை அணிய வேண்டும் என்றும், அனைவரிடமும் ஒழுங்காகப் பேச வேண்டும் என்ற உயர்ந்த குணங்களைக் கடைபிடிக்க வேண்டும் என்றும் மக்களிடத்தில் வலியுறுத்தினார். மக்களை, கல்வி மற்றும் பொருளாதாரத்தில் மேம்பாடு அடையச் செய்திட வேண்டும் என்பதற்காகத் தம் ஆயுள் முழுவதும் நாட்டு மக்களுக்காகத் தொண்டுகள் செய்து வந்தார்.

1891ஆம் ஆண்டு தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்காக "பறையர் மகாஜன சபை" என்னும் இயக்கத்தின் மூலம், பறையன் நாளிதழ் தொடங்கி அதில் தம் கருத்துகளைத் தொடர்ந்து எடுத்துரைத்து வந்தார். 1893 ஆம் ஆண்டு இராயப்பேட்டை வெஸ்லி பள்ளியில் இந்தியாவிலேயே முதன்முறையாகப் பழங்குடியின மக்களின் மாநாட்டைக் கூட்டி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

1930-32ஆம் ஆண்டுகளில் இலண்டனில் நடைபெற்ற வட்டமேசை மாநாடுகளில் தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாக அண்ணல் அம்பேத்கருடன் இணைந்து பங்கேற்று, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அரசியல் அதிகாரம் வழங்கப்பட்டால்தான் தீண்டாமை ஒழியும் என்று தம் கருத்துகளை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். மக்கள் பணி செய்தமைக்காக, ஆங்கிலேய அரசு இவருக்கு 1926 ஆம் ஆண்டு ராவ்சாகிப் பட்டமும், 1930 ஆம் ஆண்டு ராவ் பகதூர் பட்டமும், 1936 ஆம் ஆண்டு திவான் பகதூர் பட்டமும் வழங்கிப் பாராட்டியது.

திவான் பகதூர் இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் 80 வது பிறந்த நாளன்று மனிதகுலத்திற்குச் சிறந்த சேவையாற்றி, தாம் சார்ந்த மக்களுக்குப் பல சாதனைகளைப் புரிந்தமைக்காக, 1939 ஆம் ஆண்டு மூதறிஞர் இராஜாஜி அவர்கள் தலைமையில், தமிழ்த்தென்றல் திரு. வி.க.அவர்கள் முன்னிலையில் 'திராவிடமணி' என்னும் பட்டம் வழங்கப் பட்டது.

இரட்டைமலை சீனிவாசன் அவர்கள் பதவி, புகழ் ஆகியவைகளை விரும்பாமல், தம் வாழ்நாள் முழுவதும் ஆதிதிராவிட, பழங்குடியின சமுதாயத்திற்கு அயராது உழைத்து, தாம் சார்ந்த சமுதாயத்தினருக்கு ஒரு ஞானியாகவும், வழிகாட்டியாகவும் திகழ்ந்து நன்மதிப்பைப் பெற்றுள்ளார் என்றால் அது மிகையாகாது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 15.8.2000 அன்று திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களுக்கு நினைவு அஞ்சல் தலையினை வெளியிட்டார்.

முதலமைச்சர் அவர்கள், செங்கல்பட்டு மாவட்டம், அச்சரப்பாக்கம் பேரூராட்சியில் ரூபாய் 2 கோடி 18 இலட்சம் மதிப்பீட்டில் திவான் பகதூர் திராவிட மணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களைப் போற்றும் வகையில் அவர்தம் திருவுருவச்சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைத்து 27.2.2024 அன்று திறந்து வைத்தார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில், திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளான ஜுலை 7 ஆம் நாள் அரசு விழாவாக ஆண்டுதோறும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

அதன்படி, 7.7.2025 அன்று கொண்டாடப்படும் திவான் பகதூர் திராவிடமணி இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்த நாளில் அவருடைய திருவுருவச்சிலைக்கு அமைச்சர் பெருமக்களுடன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், மேயர், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டு மாலையணிவித்து மரியாதை செய்து சிறப்பிக்கிறார்கள்.

### நகராட்சி நிர்வாகம் - குடிநீர் வழங்கல் துறையில்

# இளநிலை - உதவிப் பொறியாளர்கள் பணியிடங்களுக்கு தகுதியானவர்கள் தேர்வு!

## தமிழ்நாடு அரசு விளக்கம்!

சென்னை, ஜுலை 6 -

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட நிர்வாக அமைப்புகளில் உதவிப் பொறியாளர், இளநிலைப் பொறியாளர் உள்ளிட்ட பணியிடங்களுக்குத் தகுதி வாய்ந்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டது தொடர்பாக அரசு விளக்கமளித்துள்ளது.

இது தொடர்பான செய்தி வெளியீடு வருமாறு:-

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், பேரூராட்சி இயக்குநரகம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியம் ஆகிய துறைகளில் காலியாக உள்ள தொழில்நுட்ப பணியிடங்களான உதவிபொறியாளர் / இளநிலை பொறியாளர், உதவி பொறியாளர் (திட்டம்), வரைவாளர், பொதுப்பணி மேற்பார்வையாளர், பணி ஆய்வாளர், தொழில்நுட்ப உதவியாளர், நகரமைப்பு ஆய்வாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் ஆகிய 2569 பணியிடங்களை நிரப்பிட 02.02.2024 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டது. இப்பணியிடங்களுக்கு விண்ணப்பித்த தேர்வாளர்களுக்கு சென்னை, அண்ணா பல்கலைக்கழகம் மூலம் 29.06.2024, 30.06.2024 மற்றும் 06.07.2024 ஆகிய தேதிகளில் எழுத்து தேர்வுகள் நடத்தப்பட்டது.

இத்தேர்வில் தேர்வு பெற்ற தேர்வாளர்களுக்கு அக்டோபர் 2024 ல் தேர்வுக் குழுவால் அண்ணா பல்கலைக்கழகத்தில் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டு, பெறப்பட்ட மதிப்பெண்கள் மற்றும் இனசுழற்சி அடிப்படையில் தரவரிசைப் பட்டியல் தயார் செய்யப்பட்டு 24.02.2025 அன்று வெளியிடப்பட்டது.

தேர்வு செய்யப்பட்ட நபர்களுக்கு தரவரிசை பட்டியலின்படி, கலந்தாய்வு நடத்தி துறைகள் வாரியாக பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேற்காணும் நேரடித் தேர்வின் மூலம் தேர்வு செய்யப்பட்டவர்களின் பட்டியல் https://tnmaws.ucanapply.com என்ற இணையதள முகவரியில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு அச்செய்தி வெளியீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மிகுந்த பொறுப்போடு முதலமைச்சர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு 'ஜனசக்தி' நாளேடு பாராட்டு!


ஜூலை 06 - ஜூலை 12 / 2025
தொட்டுப் பார்த்தால் காகிதம் தொடர்ந்து படித்தால் ஆயுதம்
ஜனசக்தி
மலர் 88 இதழ் 14
மிகுந்த பொறுப்போடு முதலமைச்சர்

திருப்புவனத்தில் காவலர்களால் அடித்துக் கொல்லப்பட்ட அஜித்குமாரின் மரணம் தமிழ்நாட்டை உலுக்கி இருக்கிறது. ஒரு காவல் நிலையத்தில் புகார் தந்து அதைப் பெற வைப்பதற்கும், சி.எஸ்.ஆர். எனப்படும் ரசீதை வாங்குவதற்கும், முதல் தகவல் அறிக்கை எழுத வைப்பதற்கும் சாதாரண மக்கள் படும் பாடு சொல்லி மாளாது.

ஆனால் எழுத்து மூலமான எந்தப் புகாரும் இன்றி, எஃப்.ஐ.ஆர் எதுவும் போடாமல், 27 வயது இளைஞனை அடித்தே கொன்றிருக்கிறார்கள்.

அதுவும் டி.எஸ்.பி.யின் பொறுப்பில் உள்ள தனிப்படை.

ஒரு நாள் நைய அடித்து, அந்தத் தங்கநகையை திருடி இருக்க வாய்ப்பு இல்லை என்று விட்டுவிட்ட பின்பு, மீண்டும் 'நன்றாக விசாரிக்கச் சொல்லி' உயர் அதிகாரியிடம் இருந்து ஆணை வந்ததால்,உயிர் போகும் வரை மிருகத்தனமாக அடித்துத் துவைத்து இருக்கிறார்கள்.

ஆணையிட்டவர் யார்? அவ்வளவு அக்கறை செலுத்துவதற்கு என்ன காரணம்? என்பது பற்றி இன்னும் எதுவும் தெரியவில்லை. படுகொலை செய்யப்பட்ட அஜித்குமாரின் உயிருக்கு ஈடாக வேறு எதையும் கொடுத்து விட முடியாது என்றாலும், இதுவரை இல்லாத சில நல்ல விஷயங்களும் நடந்திருக்கின்றன.

இப்போது ஐந்து காவலர்கள் சிறையில் இருக்கிறார்கள். டி.எஸ்.பி இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார். எஸ்.பி. பொறுப்பிலிருந்து அகற்றப்பட்டு காத்திருப்பில் வைக்கப்பட்டிருக்கிறார்.

முதலமைச்சர், கொலை செய்யப்பட்ட அஜித்குமாரின் தாயார் மற்றும் சகோதரியிடம் தொலைபேசி மூலம் பேசி, நடந்த சம்பவத்துக்கு வருத்தம் தெரிவித்ததுடன் உரிய நடவடிக்கை எடுக்க உறுதியும் தந்திருக்கிறார். இதுவரை எந்த முதல்வரும் இப்படி செய்ததில்லை.

சென்ற வருடம் வழக்கறிஞராகப் பதிவு செய்து கொண்ட கார்த்திக்ராஜாவும், கணேஷ் குமாரும் நிகழ்விடத்தில் உடனிருந்தது மட்டுமில்லாமல், புகார் அளித்து இதனை வெளியில் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்கள் மிகுந்த பாராட்டுக்குரியவர்கள்.

இந்தக் கொடூர சித்திரவதையை, மறைந்திருந்து பார்த்து, வீடியோ எடுத்ததோடு, நேரடியாக நீதிமன்றத்திற்கு வந்து சாட்சியம் சொன்ன கோவில் ஊழியர் பெருமதிப்பிற்கு உரியவராகிறார்.

வழக்கம்போல, உடற்கூராய்வு அறிக்கையை தராமல் அரசு' மருத்துவமனை இழுத்தடித்து இருக்கிறது. நீதிமன்றம் தலை யிட்டதால் அது கிடைத்திருக்கிறது.

என்றாலும் ஜுடிசியல் மாஜிஸ்திரேட்டும், இரண்டு இளம் வழக்கறிஞர்களும் கூடவே இருந்ததால், உடலில் 44 காயங்கள் இருந்ததையும், அடித்ததனால் தான் உயிர் பிரிந்து இருக்கிறது என்பதையும் உடற்கூராய்வில் பதிவு செய்திருப்பதாக தெரிகிறது.

சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியன், மரியா கிளாட் ஆகியோர், வழக்கறிஞர்களின் வாதத்தை பொறுமையாகக் கேட்டதோடு அல்லாமல், சாட்சியையும் இதமாக கேள்வி கேட்டு, நீதிமன்றம் நம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கலாம் என்பதை உறுதி செய்து இருக்கிறார்கள்.

தூத்துக்குடியில் 13 பேரைச் சுட்டுக் கொன்ற பிறகு, அதை தொலைக்காட்சியில் பார்த்துதான் தெரிந்து கொண்டேன் என்று பொறுப்பற்றுப் பேசிய, முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிச்சாமி, இப்போது ஏதேதோ அறிவுரை கூறுகிறார்!

எங்களிடம் மறைப்பதற்கு ஏதுமில்லை என்றுகாட்டுவதற்காகவோ என்னவோ, இந்த வழக்கை மத்திய புலனாய்வுத் துறைக்கு மாற்றி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது. ஆனால், தூத்துக்குடி ஸ்டெர்லைட், பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்குகளை சி.பி.ஐ. கையாண்ட விதம் அதன் மீது நம்பிக்கை ஏற்படுத்துவதாக இல்லை.

காவல்துறை சீர்திருத்தத்துக்காக, கோபால்சாமி கமிஷன் (1969-71) சபாநாயகம் கமிஷன் (1989-90) பூரணலிங்கம் கமிஷன் (2006-08) நீதிபதி சி.டி.செல்வம் கமிஷன் (2022-25) என நான்கு ஆணையங்கள் தமிழ்நாடு அரசால் நியமிக்கப்பட்டன.

அனைத்து ஆணையங்களுமே 'காவல் மரணங்கள்' குறித்து ஆய்வு செய்து, விரிவான அறிக்கைகளைக் கொடுத்திருக்கின்றன. அவை பெரும்பாலும் நிறைவேற்றப்படவில்லை. நிறைவேற்றப்பட்டவற்றையும் ஆணவம் மிக்க காவல்துறை பயனில்லாமல் போகச் செய்து விட்டது. காவல் நிலையத்துக்குள் சிசிடிவி கேமரா வைக்கப்பட வேண்டும் என்பது பூர்ணலிங்கம் கமிஷன் பரிந்துரைதான். கேமரா வைக்கப்பட்டது; ஆனால் அவை எதுவும் இயங்காது ! அல்லது கேமரா பார்வையில் படாத இடத்தில் வைத்து அனைத்து குற்ற செயல்களும் நடத்தப்படுகின்றன.

பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில், காவல்துறை எப்படி இருந்ததோ, அதிலிருந்து இன்று வரை மாறவே இல்லை. எது செய்தாலும் தப்பிவிடலாம் என்ற அதிகார ஆணவத்துக்குள் உறைந்து கிடக்கிறது.

மிகுந்த பொறுப்போடு இந்த நிகழ்வைக் கையாண்ட முதலமைச்சர், காவல்துறை சீர்திருத்தத்திற்கும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சித்திரவதைகளுக்கு எதிராக சட்டம் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நன்றி: ஜனசக்தி ஜுலை 6 - 12**

### வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதி

# முன்னாள் எம்.எல்.ஏ., ஜி.நடராஜன் இல்லத் திருமணம்!

## அமைச்சர் துரைமுருகன் நாளை நடத்தி வைக்கிறார்!

வேலூர், ஜுலை 6 -

வேலூர் மாவட்டம் காட்பாடி தொகுதி முன்னாள் எம்.எல்.ஏ, ஜி.நடராஜன் அவர்களின் பேத்தியும் சேனூர் ஏ.ஆர். லட்சுமணன் எல்.சாந்தி ஆகியோரின் மகள் எல். பவித்ரா முத்தரசிகுப்பம் எம்.கிருஷ்ணன் சங்கரி ஆகியோரின் மகன் விவேகானந்தனுக்கும் நாளை 7ந்தேதி (திங்கட்கிழமை) காட்பாடிவட்டம் சேர்க்காடு கூட்ரோடு வள்ளி மலை சாலையில் அமைந்துள்ள எ.வி.என். திருமண மண்டபத்தில் காலை 7மணிக்குள் திருமணம் நடக்கிறது.



திருமணத்தை கழக பொதுச் செயலாளர், நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் நடத்தி வைக்கிறார். திருமணத்தில் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமது சகி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அரக்கோணம் எஸ். ஜெகத் ரட்சகன், வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த், மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மாவட்டப் பொருளாளர் சி.நர சிம்மன், கழக புரவலர் துரைசிங்காரம், வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார் துணை மேயர் எம். சுனில் குமார், ஒன்றிய கழக செயலாளர் எஸ்.சரவணன், ஊராட்சி ஒன்றிய குழு தலைவர் வேல்முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்துகிறார்கள். திருமணத்திற்கு வருகைதரும் அனைவரையும் மணமகளின் பெற்றோர் லட்சுமணன் சாந்தி, தாய் மாமன் நகர கூட்டுறவு வங்கி தலைவர் எஸ்.டி. அசோகன் ஆகியோர் ஏற்பாடுகளை செய்து உள்ளனர்.



விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, முகையூர் வடக்கு ஒன்றியம், கண்டாச்சிபுரம் ஊராட்சியில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி மண், மொழி, மானம் காக்க இணைவோம் 'ஓரணியில் தமிழ்நாடு' என்ற புதிய உறுப்பினர் சேர்க்கையை துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், எஸ்.லூயிஸ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன், ஊராட்சி மன்ற தலைவர் ரவிக்குமார், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஜீவா, தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் திருநாவுக்கரசு, உள்ளாட்சி பிரதிநிதிகள், BLA 2, BDA, கிளைச் செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### 10.07.2025 அன்று தமிழ்நாடு துணை முதலமைச்சர் வருகை குறித்து

# நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், ஜுலை. 6-

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம் இன்று (06.07.2025 - ஞாயிற்றுக்கிழமை) காலை 11.00 மணிக்கு நாமக்கல் மோகனூர் சாலை, முல்லை நகரில் உள்ள நாமக்கல் கிழக்கு மாவட்ட அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் இனமான பேராசிரியர் அரங்கத்தில் நடைபெற உள்ளது.



மாவட்ட அவைத் தலைவர் சி.மணிமாறன் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன், சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினரும், மாவட்ட கழக துணை செயலாளருமான கே.பொன்னுசாமி,

நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் பெ.இராமலிங்கம் ஆகியோர் முன்னிலை யில், நடைபெறும் இக்கூட்டத்திற்கு தொகுதிப் பார்வையாளர்கள், இராசிபுரம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் நன்னியூர் ராஜேந்திரன், மாநில நெசவாளர் அணி தலைவர், சேந்தமங்கலம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ரேகா பிரியதர்ஷினி, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர், நாமக்கல் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் முனவர் ஜான், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர்,

முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், பொறுப்பாளர், சிறப்பு அழைப்பாளர்கள், அனைத்து சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் மற்றும் தலைவர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : 10.07.2025 அன்று நாமக்கல் மாவட்டத்திற்கு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் வருகை குறித்து,

'ஓரணியில் தமிழ்நாடு' - உறுப்பினர் சேர்க்கை பணிகள் குறித்து, கழக ஆக்க பணிகள் குறித்து.

இவ்வாறு நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார், எம்.பி., தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.